குட்டி உண்ணியும், காளையும்



தான் குழந்தைகளுக்காக எழுதிய பதினோரு புத்தகங்களில் **ராபெர்ட் வாவ்ரா** மிக்க விரும்பிய புத்தகம் இது.

உணர்ச்சிபூர்வமான கருப்பு-வெள்ளை வரைபடத்தின் ஓவியர். காலம் கடந்த ஜல்லிகட்டு அமெரிக்கர், **ஜான் ஃபுல்டன்**

தமிழ் ஆக்கம் **அனுமிதா**

இது ஒரு உண்ணி கொக்கு மற்றும் அதன் உயிரைக் காப்பாற்றும் ஜல்லிகட்டு காளையின் மனதை நெகிழ வைக்கும், உணர்ச்சியூட்டும் கதை. பல ஆண்டுகளுக்குப் பிறகு, தனக்கு செய்த உதவியை உண்ணி கொக்கு திருப்பி தர முடிகிறது., சண்டை அரங்கத்திற்குள் செல்லும் காளை கசாப்புக் கடையில் தான் போய் சேரும் என்று கொக்கு எச்சரிக்கிறது. இவ்வாறு சண்டையிடும்போது, பறவை அதை காப்பாற்ற ஒரு திட்டத்தை வகுக்கிறது.

உண்ணி கொக்குவின் நட்பு மற்றும் விசுவாசத்தைப் பற்றிய ஒரு புத்தகம் இது.



பல ஆண்டுகளுக்கு முன்பு, தெற்கு ஸ்பெயினில், ஒரு பெரிய சதுப்பு நிலத்தின் அருகே, எதற்கும் அஞ்சாத இளம் சண்டை காளை ஒன்று இருந்தது. அதன் ரோமங்கள் நல்ல கருப்பாகவும், பளபளப்பாகவும் இருந்தன. கண்கள் கருமையுடன் மென்மையாகவும் இருந்தன. ஆனால், கோபம் வந்த போது அதே கண்கள் சூடான நிலக்கரி போல் மின்னின.

இந்த சிறிய காளையின் கொம்புகள் அதன் தலையில் சிறிய புடைப்புகள் மட்டுமே என்றாலும், எப்போதும் தாக்குவதற்கு தயாராகவே இருந்தன. என்ன இருந்தாலும், ஸ்பானிஷ் காளைகள் உலகிலேயே துணிச்சலான காளைகள் இல்லயா?



இளம் காளை இருந்த இடத்திற்கு அருகிலேயே உண்ணி கொக்கின் கூடு ஒன்று இருந்தது. இந்த கொக்குகளின் முகபாவம் எப்போதும் ஆழ்ந்து யோசிப்பது போல் இருக்கும். எவ்வளவு கோப பாவம் அதுகளின் முகத்தில் தெரிகிறதோ, உண்மையில் அவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும். இந்த வெள்ளை பறவைகளுக்கு மிகவும் பிடித்த உணவு, பெரிய, கருப்பு காளைகள் மேல் ஒட்டிக்கொண்டிருக்கும் அருவருப்பான சிறிய, உண்ணிகள்.

ஒரு நாள் தாய் உண்ணி கொக்கு கூட்டை விட்டு வெளியில் செனறிருந்த சமயம் ஒரு இளம் நரி, குழந்தை உண்ணி கொக்குவிடம் பதுங்கி வந்தது.

ஆனால், அது பாய போகும் சமயம், இளம் காளை அங்கு வந்து.,“உனக்கு வெட்கமாக இல்லை?”, என நரியைப் பார்த்து கர்ஜித்தது.

ஆனால், அந்த நரி தன் விஷப்பல்லைக் காட்டி, உறுமியது.





உடனே அந்த காளை தலையைத் தாழ்த்தி, அந்த நரியைத் தாக்கி விரட்டிவிட்டு கூட்டுக்குச் சென்றது.

“உனக்கு நான் எவ்வளவு நன்றி சொன்னாலும் போதாது”, என்று குழந்தை உண்ணி சொல்லிற்று.

இளம் காளை சிரித்துக் கொண்டே, “நீ வளர்ந்து பறக்க ஆரம்பித்து, உன் அலகு கூர்மையானதும் என் முதுகில் இருக்கும் உண்ணிகளை பொறுக்கலாம். நீ உண்ணி கொக்கு என்பதால் குட்டி உண்ணி கொக்கு என்றுஅழைப்பேன்”, என்று சொல்லியது.

நான் உன்னை டோரோ என்று கூப்பிடுகிறேன்; ஏனென்றால், ஸ்பானிஷ்-ல் டோரோ என்றால் காளை என்று அர்த்தம்”, என்று சொல்லிற்று அந்த குட்டி உண்ணி.

அன்றையிலிருந்து, காளையும்,. உண்ணியும் நெருங்கிய சிநேகிதர்கள் ஆகிவிட்டார்கள்





நாட்கள் நகர்ந்தன, குட்டி உண்ணியின்
வெள்ளை இறகுகள் நீளமாக வளர்ந்தன,
விரைவில் அது ஒரு அம்பு போல
வானத்தில் பறக்க முடியும்.

டோரோ

காளையும் பெரியதாகவும்
வலிமையாகவும் மாறியது; மற்றும்
அதன் கொம்புகள் கூர்மையாக, பிறை
நிலவாக வளைந்திருந்தன




தெற்கு ஸ்பெயினில் அடிக்கடி பல நாட்கள் கடுமையாக மழை பெய்யும்; அப்போதெல்லாம், குட்டி உண்ணி டோரோவின் பெரிய கால்களுக்கு இடையில் ஒதுங்கிக்கொள்ளும்.


தெற்கு ஸ்பெயினில் வழக்கமாக,
கோடையில் வெய்யில் கொளுத்திவிடும்;
குட்டி உண்ணி குளத்தில் மூழ்கிவிட்டு வந்து
குளிர்ந்த நீரால் டோரோவின் வெப்பத்தைத்
தணிக்கும்.



நாள்தோறும் காலை சிற்றுண்டி சீக்கிரமாகவே சாப்பிட விரும்பும் குட்டி உண்ணி, தன் சிநேகிதனை எழுப்பிவிடும். நீண்ட நேரம் டோரோ தூங்க விரும்பினாலும், குட்டி உண்ணி அதன் பெரிய கழுத்திலிருந்து எல்லா பால் உண்ணிகளயும் எடுப்பதற்ககாக அது தன் தலையை ஒரு பக்கமாக திருப்பும்




பிறகு, டோரோ வயல்வெளியில் மேய்க்கப் போகும்; அப்போது தன்னுடைய பெரிய குளம்புகளினால் புல்களை கலைத்து, குட்டி உண்ணிக்கு மதிய உணவிற்காக, அதில் உள்ள வெட்டுக்கிளிகளையும், பிற பூச்சிகளையும் புரட்டிவிடும்.



தன் மேய்ச்சலை விட்டு வெளியில் எங்கும் போகாமலேயே, தான் உலகம் முழுவதும் பார்த்தது போல் டோரோவிறிகுத் தோண்றும். இதறகுக் காரணம் அமைதியான மாலை நேரங்களில், குட்டி உண்ணி, ஒவ்வொரு நாளும் தான் போன இடங்களைப் பற்றியும், பார்த்தவைகளைப் பற்றியும் வர்ணிக்கும். நீல சமுத்திரம், அதில் மிதந்த படகு, டோரோவை விட பெரியதாக இருந்த ஜிப்ரால்டர் பாறை முதல் மிக தூரத்தில் இல்லாத, வட ஆப்பிரிக்காவின், விசித்திரமாக முதுகில் கூம்பு உள்ள ஒட்டகங்கள் என யாவற்றையும் தெரிவிக்கும்.



மற்ற காளைகளுடன் விளையாட்டுச் சண்டை போடுவது டோரோவிற்குப் பிடிக்கும். முன்னும்-பின்னுமாக ஒன்றுக்கொன்று தள்ளும் விளையாட்டு அது. குட்டி உண்ணி உதவ முயலும்; ஆனால் டோரோ எபபோதும் வென்றது. அந்த மேய்ச்சலிலேயே அது மிகப் பெரிய, வலிமையான காளை.







அதுவும், குட்டி உண்ணியும் ஒன்றாக
சேர்ந்து நடந்து செல்லுவதை, மற்ற
காளைகள் ரசித்து பாராட்டும்.

ஒரு நாள், காளைச் சண்டகாக துணிச்சலான காளைகளைப் பொறுக்க, மேய்ச்சலுக்கு குதிரைகளில் ஆண்கள் வந்தார்கள். டோரோவை அவர்கள் துரத்திச் சென்று, அவர்களின் நீண்ட கழிகளால் அதை குத்திய போது, குட்டி உண்ணி வானத்திலிருந்து, அவர்களின் தலைகளை குறி வைத்து , தொப்பிகளை தரையில் தள்ளிவிட்டது.

சீக்கிரமே, அந்த மனிதர்கள், அங்கு இருந்த காளைகளிலேயே, டோரோ மிக்க துணிச்சலுடன் ஸ்பெயினிலேயே மிகவும் முரட்டுட்த்தனமான காளை என்பதை அறிந்துக் கொண்டார்கள்.



ஒரு நாள், பிற்பகலுக்குள்ளேயே, நீண்ட நேரம் சுற்றிவிட்டு குட்டி உண்ணி திரும்பிய போது, பெருமையுடன் தன் கொம்புகளை மரத்தின் மீது உராய்த்துக் கொண்டிருந்த டோரோ, மிக்க உற்சாகமாக இருந்தது. அடுத்த ஞாயிற்று கிழமைக்கு ஸெவிய்யாவில் நடக்கவிருக்கும் காளை சண்டைக்கு ஒரு காளையை தேர்ந்தெடுக்க இன்று இங்கு சிலர் வந்திருந்தனர்", என்று உரக்கக் கத்திய டோரோ, "மிக்க துணிச்சல் உடைய காளையாக என்னைத் அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள்", என்று சொல்லி முடித்தது





"ஆனால் டோரோ, நீ திரும்பி வரமுடியாது",என்று குட்டி உண்ணி அழுதது." காளைகள் ஒருபோதும் போட்டி அரங்கத்திலிருந்து திரும்பியது இல்ல, மாடடோரின் வாளிலிருந்து தப்பினதும் இல்லை".

"கவலைப்படாதே, குட்டி சினநேகிதனே" என்ற டோரோ", அவர்கள் ஸெவிய்யாவில் இதுவரை கண்டிராத துணிச்சலான காளை நான்; யாரும் என்னை வாளால் குத்த முடியாது" எனறது.

மனமுடைந்த குட்டி உண்ணியின் சிறிய மஞ்சள் கண்களில் தண்ணீர் வழிந்தது. காளை சொல்வது நடக்காது என்று அதற்கு நன்றாகவே தெரியும்; டோரோவிடம் அது சொன்னதில்லை என்றாலும் ஒரு ஞாயிறன்று, மதிய வேளையில, செவிய்யாவிற்கு பறந்து சென்று காளை சண்டையைப் பார்த்ததினால், அங்கு போகும் எந்த காளைகள் திரும்பி வரமுடியாது என்று புரிந்துக் கொணடது.




இந்த சண்டைக்குப் போகிற காளைகள் அத்தனையும் கசாப்புக்காரனிடம் தான் போய் சேரும் என்று எவ்வளவோ வாதித்து, முயற்சி செய்த போதும், குட்டி உண்ணியால், அதை நிறுத்த முடியவில்லை. இறுதியில், தன் பொறுமையை இழந்து, சிறகுகளைப் படபடவென்று அடித்து, “நீ ஏன் இப்படி விடாகொண்டனாக இருக்கிறாய்”, என்று கிரீச்சிட்டது.




பின்னர் அந்த தவிர்க்க முடியாத நாளும் வந்தது; சிலர் ஒரு லாரியில் வந்து அதில் டோரோவை ஏற்றினார்கள். அந்த லாரியை பின் தொடர்ந்த குட்டி உண்ணி மிகவும் சோகமாக இருந்தது; தன் இருதயம் நின்றுவிடுமோ என்று பயந்தது.





பிறகு பெரிய மரக்கதவு திறக்கவும்,
டோரோ அரங்கத்திற்குள் பாய்ந்து வந்தது



யாவரும் ஸெவிய்யாவிற்கு வந்த போது, போட்டி அரங்கம் பார்வையாளர்களால் நிரம்பியிருந்தது. இசைகுழுவின் இசை மிக அற்புதமாக இருந்தது. பெண்கள் தங்கள் சிறந்த கருப்பு சரிகை மேல்போர்வை அணிந்திருந்தார்கள். இறுதியில் போட்டி அரங்கத்தின் வயசான தலைவர் இசைக்கருவியை வாசிப்பதற்கு சைகை செய்யவும், அங்கு இருந்த காளை சண்டை வீரர்கள் பொன்நிற மணலில் கர்வத்துடன் நடந்து போனார்கள்.

.

.

தைரியம் இல்லாமல், அரங்கத்திற்குப் பின்னால் உட்கார்ந்து குட்டி உண்ணி தேம்பி அழுதுக் கொண்டிருந்தது




குட்டி உண்ணி, தொழுவத்து சுவரில், முன்னும்-பின்னுனமாகப் பறந்துக் கொண்டே, “தான் என்ன செய்யலாம்”, என்று யோசித்துக் கொண்டிருந்தது. அந்த தொழுவத்தில் இருந்த ஒரு வயதான புத்திசாலி எருது, இந்த உண்ணியின் விம்பலைக் கேட்டு, “வெள்ளை நிற சிறகுடைய சிநேகிதனே! ஏன் சோகமாக இருக்கிறாய்?’ என்று கேட்டது.” பின்னர் குட்டி உண்ணி, அதனிடம், டோரோவைப் பற்றி சொல்லியது

.“ஓ, அப்படியா1” என்ற எருது, “கேட்க வருத்தமாக இருக்கிறது. ஆனால், உன் சிநேகிதன் ஸ்பெயினிலேயே மிக்க துணிச்சலான காளை என்று சொல்கிறாய்; அப்படியானால், ஒரு வாய்ப்பு இருக்கிறது. இருந்தும், முன் போல், தைரியம் மிகுந்த காளைகளை எப்படி மன்னிப்பது என்று ஸெவிய்யா மக்களுக்குத் தெரிவதில்லை. அந்த ஞாபகம், *கண்பார்வை மங்கிய தலவர்* ஓருத்தருக்குத் தான் இருக்கிறது”, என்று சொல்லி முடித்தது.

அப்போ எப்படி பண்றது? தயவுசெய்து சீக்கிரம் சொல்லவும்; டோரோ ஏற்கனவே அரங்கத்தில் இருக்கிறது”, குட்டி உண்ணி கெஞ்சிற்று






"நான் ஒரு கன்றாக இருந்தபோது, ஒரு காளை மிகவும் தைரியமாக இருந்ததால், மக்கள் அனைவரும் தங்கள் வெள்ளை கைக்குட்டைகளை எடுத்து தலைக்கு மேலே அசைத்தனர். பின்னர் காளை தன் வாழ்நாள் முழுவதும் நிம்மதியாக இருக்கட்டும் என்று தலைவர் அதை தன்னுடைய மேய்ச்சலுக்கே திருப்பி அனுப்பும்படி கட்டளையிட்டார்”, என்று அந்த எருது சொல்லிற்று.

"வயதான தலைவருக்குக் கண்பார்வை குறைவாக இருப்பதாக சொல்லுகிறதே?" ஒரு கணம் யோசித்த குட்டி உண்ணி, ஒரு வெள்ளை அம்பு போல் பாய்ந்து.

குட்டி உண்ணி அரங்கத்தின் மேலே பறக்கும் போது, மேடடோரின் ‘
‘முலெட்’’ என்கிற சிவப்பு துணியை நோக்கி டோரோ ரயில் இஞ்ஜின்
போல் பாய்வதைப் பார்த்தது.



நகரத்தின் மீது, ஆற்றின் குறுக்கே, குட்டி
உண்ணி சதுப்பு நிலங்களை நோக்கி பறந்தது.






நூற்று கண்ணக்கான பிற கால்நடைகள் அமைதியாக சாப்பிட்டுக் கொண்டும், வெய்யில் காய்ந்து கொண்டும் இருந்த நேரத்தில், குட்டி உண்ணி, உண்ணிகளின் கூக்குரலில் உதவிக்காக் கத்திக்கொண்டு அதுகளிடம் பறந்து போயிற்று.

அழுகுரலைக் கேட்டு, பறவைகளின் பெரிய மந்தை ஒரு வெள்ளை மேகம் போல் உயர பறந்து ஸெவிய்யாவை நோக்கி, குட்டி உண்ணியை பின்தொடர்ந்தது.



அரங்கத்தில், பயத்தோடு இருந்து கொண்டிருந்த மேடடோர், தன்னுடைய கூர்மையான கத்தியை எடுத்துக் கொண்டிருந்த சமயத்தில், . “நான் பார்த்ததில், இந்த எருது தான் அதி தைரியசாலி”, என்று வயதான தலைவர் அறிவித்தார்.
மேடடோர் வாளை குறிபார்த்து வீச முனைந்த சமயம், டோரோவிற்கு குட்டி உண்ணி சொன்னதின் உண்மை உரைத்தது





வெள்ளை மேகம் போல், கும்பலாக உண்ணிகள் கீழே இறங்கி, அரங்கத்தைச் சுற்றி பறந்தன



வயதான பார்வை மங்கிய தலைவர், அரங்கத்தில் பறவைகளைப் பார்த்ததும், “குழல் வாத்தியங்களை ஊதுங்கள். எனக்குத் தெரியும், எனக்குத் தெரியும்! ஸெவிய்யா மக்களுக்கு, ஒரு வீர காளையை எப்படி காப்பாற்ற வேண்டும் என்று இன்னும் ஞாபகம் இருக்கிறது! பாருங்கள் அந்த வெள்ளை கைக்குட்டைகளை எல்லாம்!” என்று ஆராவாரித்தார்.

அந்த அரங்கத்தில் சூழ்ந்திருந்த பார்வை மங்கிய அத்தனை வயதானவர்களும், பறவைகளை வெள்ளை கைக்குட்டைகள் என தவறாக நினைத்து “காளையைக் காப்பாற்று!“, என்று கூச்சலிட்டனர்;

அரங்கத்தில் இருந்த யாவரும் தங்கள் வெள்ளை கைகுட்டைகளை அசைக்கத் தொடங்கியதும் அரங்கமே ஒரு வெள்ளை சமுத்திரம் போல் தோற்றமளித்தது..

குழல் வாத்தியம் உரக்க வாசிக்கப்பட்டது. முன்னைவிட இசைக்குழு இன்னும் அற்புதமாக வாசித்தது. அரங்கமே அதிரும் வரை கூட்டம் கைதட்டியது.. அதன் பிறகு பெரிய மரக்கதவு திறக்கவும், காளை பெருமையுடன் அரங்கத்தை விட்டு மெதுவாக தொழுவத்திற்குள் சென்றது.

பின்னர், குட்டி உண்ணி, சதுப்பு நிலத்திற்குத் திரும்பிய தன் சிநேகிதர்களுக்கு, அமர்க்களமாக நன்றி தெரிவித்தது.





அரங்கத்தை விட்டு போனதும், டோரோ "ஓ, குட்டி உண்ணி, நீ சொன்னது சரிதான்; நீயும், உன் சிநேகிதர்களும் வரவில்லை என்றால், இப்போது நான் ஏதோ ஒரு கசாப்புக் கடையில் தான் தொங்கிக் கொண்டிருந்திருப்பேன்", என்று சொல்லி அழுதது.

"சற்று ஓய்வு எடுத்துக்கொள்", என்று குட்டி உண்ணி சொல்லிக் கொண்டே டோரோவின் தோளில் இருந்து ஒரு கொழுப்பு உண்ணியை எடுத்தது.



அடுத்த நாள், டோரோவை அதன் மேய்ச்சல்
இடத்திலேயே திருப்பி கொண்டுவிட்ட போது,
குட்டி உண்ணி அதற்காக் காத்துக்
கொண்டிருந்தது. அவர்கள் எவ்வளவு
சந்தோஷமாக இருந்தார்கள்!

பல வருடங்கள் கழிந்துவிட்டாலும்,
இன்றைக்கும், ஸெவிய்யாவின் மக்கள, அந்த
"வெள்ளை கைக்குட்டைகளின்" பிற்பகல்
மற்றும் காளைகளிலேயே மிக்க துணிச்சலான
டோரோ இரண்டையும் நினைவில் வைத்து
பேசுகிறார்கள்.



முற்றும்